வண்ணப்
புகைப்படங்களுக்கும்
வீடியோ
படப்பிடிப்புக்கும்
என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ
அண்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி,
நல்லூர்.
(ஸி-6982)

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

எதிர்வரும் தைப்பூச நாளில்
வீடியோ படப் பிடிப்பும்
தொடங்க உள்ளோம்
அஜந்தா போட்டோ
அண்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி,
நல்லூர்.
(ஸி-6982)

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 05 செவ்வாய்க்கிழமை (18 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 52

# ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு மேலும் பல நாடுகள் விரைவில் ஒப்பந்தம்

## சுவிஸிலிருந்து மார்ச் மாதத்தில் முதலாவது தொகுதியினர் வருவர்

லண்டன், ஜனவரி 18

ஐரோப்பிய நாடுகள் பலவும், தத்தமது தேசங்களில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்காக, ஸ்ரீலங்கா அரசுடன் விரைவில் ஒப்பந்தங்களைச் செய்ய உள்ளன.

சுவிஸ் அரசாங்கம் அண்மையில் ஸ்ரீலங்கா அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முன்னோடியாகக் கொண்டு ஏனைய நாடுகளும் ஒப்பந்தங்களைச் செய்ய இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுவிற்சர்லாந்தில் அரசியல் புகலிடம் மறுக்கப்பட்ட ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர்- எதிர்வரும் மார்ச் மாதத்தில் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

தமது நாட்டில் அரசியல் புகலிடம் மறுக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்புவதற்கான ஒப்பந்தம் ஒன்றை சுவிட்சர்லாந்து அரசு அண்மையில் ஸ்ரீலங்காவுடன் கைச்சாத்திட்டது.

அந்த ஒப்பந்தத்தை முன்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

பூநகரிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

லெப். வெற்றிவேல் (மாணிக்கராசா ஜெயராசா — பாண்டிருப்பு, அம்பாறை) என்ற போராளியே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவார்.

## குழந்தை மரணமானதற்காக டாக்டரை 50 லட்சம் ரூபா நஷ்ட ஈடு செலுத்த உத்தரவு

### கொழும்பு மாவட்ட நீதிபதி தீர்ப்பு

கொழும்பு, ஜன. 18

குழந்தை ஒன்று மரணமானது தொடர்பாக அதன் தந்தை தொடர்ந்த வழக்கில் அவருக்கு 50 லட்சம் ரூபா நட்ட ஈடு வழங்கும்படி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சிரேஷ்ட அரச வழக்கறிஞர் நீன்ஸி அரசகுலரத்தினா தொடர்ந்த வழக்கிலேயே பிரதிவாதியான குழந்தைகள் வைத்திய நிபுணர் டாக்டர் பிரியானி டி சொய்சா 50 லட்சம் ரூபா நட்டஈடும் வழக்குச் செலவும் வழங்க வேண்டும் என்று கொழும்பு மாவட்ட நீதிபதி மகாநம் திலகரத்தினா நேற்று தீர்ப்பளித்தார்.

1992 ஆம் ஆண்டு ஏப்பிரலில் டாக்டர் சொய்சாவின் பொறுப்பில் தனது நான்கு வயது மகள் சுகாவியை தாம் ஒப்படைத்து இருந்ததாகவும் —

சுகாவி அதே ஆண்டு ஜூன் மாதம் மரணமான

(2 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த குழந்தை பிரேத அறையில் குவா, குவா

கொழும்பு. ஜன. 18

இறந்து விட்டதாகக் கருதப்பட்டு ஆஸ்பத்திரி பிரேத அறைக்கு அனுப்பப்பட்ட குழந்தை சற்று நேரத்தில் பிரேத அறையில் ''குவா குவா'' குரல் எழுப்பி அழுதது.

இந்தச் சம்பவம் மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

நீலம்நோறுவ கிராமத்தைச் சேர்ந்த சண்லதா என்ற இளம் பெண் கடந்த 14 ஆம் திகதி மாதிப்பொல ஆஸ்பத்திரியில் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

குழந்தை பிறந்த பின்னர் அழவோ அல்லது அசையவோ இல்லை. இதனால் குழந்தையை உடனடியாக மாத்தளை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

அங்கு குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை இறந்துவிட்டதாகக் கூறியதை அடுத்து, குழந்தை பிரேத அறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால் அங்கு சற்று நேரத்தின் பின்னர் திடீரென குழந்தை அழத் தொடங்கி விட்டதாம்! (உ-6-9)

## ஐ. நா. தூதரக அதிகாரி நாளை யாழ். வருகிறார்

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கலஸ் நாளை யாழ். வருகிறார்.

மடு அகதிகள் முகாம் விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் அவர் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு அல்லது மூன்று நாட்கள் அவர் இங்கு தங்கியிருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## யாழ். கரையோரப் பகுதியில் விழுந்த மண்டைதீவு ஷெல்

மண்டைதீவுப் பகுதியில் இருந்து நேற்று அதிகாலையிலும், மாலையிலும் யாழ் நகர் கரையோரப் பகுதிகளை நோக்கிப் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

மாலை 5.45 மணியளவில் படையினர் ஏவிய ஷெல்கள் குருநகர மத்திய கிழக்கு வீதி, பூங்கா வீதி ஆகிய இடங்களில் குடியிருப்புகளுக்கு இடையே விழுந்து வெடித்தன. இதனால் சில வீடுகள் சேதமடைந்தன. அடுத்தடுத்து பெரும் சத்தத்துடன் ஷெல்கள் விழுந்து வெடித்ததால் பதற்றமடைந்த மக்கள் சிலர் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர்.

(உ-5-17-15-163)

## இடைவழியில் திரும்பிச் சென்ற 'ருகுணு' வந்து சேர்ந்தது

யாழ் செயலக திருத்த வேலைகளுக்கான கட்டடப் பொருள்கள் மற்றும் உர வகைகள் உட்பட 935 மெற்றிக் தொன் பொருள்களுடன் 'ருகுணு' கப்பல் நேற்று முற்பகல் பருத்தித்துறையை வந்தடைந்தது.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த 12 ஆம் திகதி கொழும்பில் இருந்து புறப்பட்ட ருகுணு கப்பல் இடைவழியில் காலிக்கு அண்மையில் வைத்து கடற்படையினரால் மீண்டும் கொழும்புக்கு திருப்பி அழைக்கப்பட்டதும் —

பின்னர் கப்பலில் இருந்த பல பொதிகள் கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்டு படையினரால் துருவித் துருவிச் சோதனையிடப்பட்டதும் தெரிந்தவையே.

அந்தக் கப்பல் அங்கிருந்து கடந்த சனிக்கிழமையே மீண்டும் வடக்கு நோக்கிப் புறப்பட அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5-162-109-173)

## மாணவர் உணவு முத்திரை திட்டம் தொடர்ந்து அமுல்

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரை வழங்கும் திட்டத்தை தொடர்ந்து அமுல் செய்வது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்தகவலை புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அரச நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் வெளியிட்டார்.

மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே மதிய உணவு முத்திரை வழங்கப்படும். பெற்றோரின் வருமானம் எவ்வளவாக இருந்த போதும் மாணவர்கள் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு உணவு முத்திரை வழங்கப்படும்.

அதிகாரிகளினால் வழங்கப்படும் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவங்களில் இதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார். (உ-எ-த)

### ★ எலும்புக்கூடுகள் விவகாரம்:

## மாணவரின் பெற்றோருக்கு கொலைப் பயமுறுத்தலாம்!

### நீதிமன்ற வாயிலில் இனந்தெரியாத குழுக்களும் நடமாட்டம்

கொழும்பு, ஜன. 18

சூரியகந்தவில் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான நீதிமன்ற விசாரணையில் சாட்சியமளித்த இந்த — காணாமற்போன மாணவர்களின் பெற்றோருக்கு — கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

இது பற்றி நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நீதிமன்ற விசாரணைகள் அடுத்த 24ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பான சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக எம்பிலிப்பிட்டிய நீதிமன்றம் நீதிவான் பியசேன ரணசிங்க முன்னிலையில் கூடியது. முறைப்பாட்டுக்காரர்களின் சட்டத்தரணிகளான ஏ.எஸ். பிரேமரத்தினாவும், திருமதி பவித்திரா வன்னியாராச்சியும் சாட்சிகளான பெற்றோர்களுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக நீதிவானுக்குத் தெரிவித்தார்கள் இதைத் தொடர்ந்து சாட்சிப் பதிவு ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையில் —

சிவில் உடையிலான — அடையாளங்காணப்படாத — இரண்டு குழுக்கள் நீதிமன்ற வளவுக்கு வெளியே இரு வாகனங்களில் காணப்பட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளதாகவும் சட்டத்தரணி பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஏற்கனவே சட்டத்தரணி பிரேமரத்னாவின் வாகனம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதினால், ஏனைய சட்டத்தரணிகளுக்கும் கொலைப் பயமுறுத்தல் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை —

நீதிமன்றத்தில் பொலீஸார் நேற்று ஆஜராகி, கடத்தப்பட்டதாகக் கூறப்படும் எம்பிலிப்பிட்டிய மாணவர்களின் எலும்புக்கூடுகள் சூரியகந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முனி



அப்ப...... உவரை இனி 'தண்ணி' இல்லாக் காட்டுக்குத்தான் மாத்துவினம் போல......!

## பூரண விசாரணை நடத்துமாறு அமெரிக்க அரசு வற்புறுத்தல்

கொழும்பு, ஜன. 18

சூரியகந்தப் பகுதியில் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் சம்பந்தமான மரணங்கள் குறித்து பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க அரசாங்கம் ஸ்ரீலங்கா அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

''மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசு தீவிர கவனம் செலுத்துகின்றது என்பதை உறுதி செய்வதற்கு இந்த ஐயை பூரண விசாரணை அவசியமாகின்றது. புதைகுழியிலிருந்து எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்படுவது குறித்து நாம் நன்கு அறிவோம்'' — இப்படி அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-6-9)

## வாதுவையில் தபால் வரும்

கொழும்பில் பொருள்களை ஏற்றிவரும் 'வாதுவ' கப்பல் நாளை மறுதினம் வியாழன் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என நேற்று தகவல் கிடைத்துள்ளது.

கொழும்பில் தேங்கி கிடக்கும் வெளியூர் தபால் பொதிகளில் ஒரு தொகுதியை அந்தக் கப்பல் மூலம் இங்கு அனுப்பிவைப்பதற்கான முயற்சிகளில், தற்போது கொழும்பில் தங்கியுள்ள வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு.எஸ்.எம். சேதுகாவலர் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-9-5-162)

### தென் மாகாண சபைத் தேர்தல்:

## இன்று முதல் ஒரு வாரம் வேட்பு மனு ஏற்கப்படும்

கொழும்பு, ஜன. 18

தென் மாகாண சபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வது இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 25 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் முடிவடையும்.

இத் தேர்தலில் போட்டியிடும் ஐ.தே.க. வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டது என்றும் —

பொதுமக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகியன தங்களின் வேட்பாளர் பட்டியல்களை இன்னும் இறுதியாக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடும் போட்டிக்கு கட்சிகள் தயாராகி வருகின்றன.

### கிட்டுவுடன் பயணம் செய்த

## கப்பல் சிப்பந்திகள் 9 பேர் மீதும் வழக்கு!

சென்னை, ஜன 18

தளபதி கிட்டுவுடன் 'எம். வி. அகத்' கப்பலில் பயணம் செய்த பின்னர் —

கப்பல் தகர்க்கப்பட முன்னர் கடலில் பாய்ந்த கப்பல் சிப்பந்திகள் 9 பேர் மீதும் இந்திய அரசு வழக்குத் தொடுத்திருக்கிறது.

மத்திய புலனாய்வுப் பிரிவினர், விசாகப்பட்டினம் சிறப்பு நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்

இவர்கள் 9 பேரும் இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் கப்பலுக்கு வெடி வைத்து மூழ்கடித்ததாகவும் — உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து விளைவிக்கும் வகையில் வெடிமருந்துகளை வெடித்ததாகவும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது மூழ்கிய கப்பலில் இருந்து — அச்சம்பவத்தில் மரணமுற்ற — இருவரின் சடலங்களையும் வெடிமருந்துகளையும் கடற்படையினர் கைப்பற்றியதாக சென்னையில் மத்திய புலனாய்வுப் பிரிவு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கப்பலில் இருந்த 110 தொன் வெடிமருந்துகளும் ஆயுதங்களும் ஏராளமான எண்ணெயும் பெற்றோலும் இருந்ததாக பின்னர் விசாரணையில் தெரியவந்தது என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

### பூநகரியில் தாக்குதல் ஆரம்பித்து ஒன்றரை மணி நேரம்:

## முகாம் தகர்க்கப்பட்ட போது படைத் தளபதி நித்திரையில்!

### இராணுவ விசாரணை மன்ற அறிக்கையில் அம்பலம்

கொழும்பு, ஜன. 18

பூநகரியில் இராணுவ — கடற்படைக் கூட்டுத் தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த போது, அந்த முகாமில் இருந்த தளபதி ஒருவர் தூங்கிக் கொண்டிருந்தாராம்.

தாக்குதல் பல மணி நேரம் நீடித்தது. ஆனால் முதல் ஒன்றரை மணி நேரம் அவர் தூக்கத்திலேயே இருந்தாராம்.

மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய இராணுவ விசாரணை மன்றத்தின் அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குண்டடிபட்ட இராணுவத்தினர் பலர் தாம் விடுதலைப் புலிகளால் சிறைப் பிடிக்கப்படுவதை விட உயிர் விடுவதே நல்லது என்று கருதி தம்மிடம் இருந்த கிரனேட்டுகள் மூலம் உயிர் விட்டனர் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## லொஸ்ஏஞ்சல்ஸில் பெரும் பூகம்பம்!

கலிபோர்னியா, ஜன 18

அமெரிக்கா-தென் கலிபோர்னியாவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அமெரிக்க நேரப்படி அதிகாலை 4 30 மணி அளவில் கடும் பூமியதிர்ச்சி ஏற்பட்டது ரிச்டர் அலகில் 6.6 என்ற அளவுக்கு பூமியதிர்ச்சியின் தாக்கம் இருந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது

நகருக்கான மின்விநியோகம் தடைப்பட்டது. தொலைபேசிச் சேவை சீர்குலைந்தது. வீடுகள், அலுவலகங்கள் பெரும் சேதமடைந்தன. நகரை விட்டு மக்கள் பெரும் பாலானோர் வெளியேறி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இருபது ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப்பெரிய பூகம்பம் இது என்று கலிபோர்னியாவில் உள்ள பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

பல கட்டடங்கள் சரிந்து விழுந்தன என்று தெரிவிக்கப்பட்டது இப்பூகம்பத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் பற்றி இதுவரை தகவல் ஏதும் வெளிவரவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

(உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அலுமாரி, சோக்கேஸ், டிரெஸிங்ரேபிள், இரண்டு லாச்சி மேசை, ஒற்றை லாச்சி மேசை, ஸ்ருல், கட்டில்கள், மெத்தைகள், விறாக்கிகள், கதவுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 7, கைலாசபிள்ளையார் பின் வீதி, நல்லூர். (28931)

பாவித்த நல்ல நிலையில் உள்ள மேசைகளும், கடைத் தளபாடங்களும், கதவுகளும் விற்பனைக்குண்டு. இல. 248, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (28943)

நல்லின சிமை முயல்கள் (பல நிறங்களை கொண்டவை), பொமனேரியன் கலப்பு பெண். நிறக்குட்டியும் (1½ மாதம்), 33 பெண்டம் சேவலும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. கு. தங்கேஸ்வரி, மே/பா சி இராசதுரை அஜந்தா, உயரப்புலம், ஆனைக்கோட்டை. (28971)

ஸ்ரீல கபினெற், வீட்டுத் தளபாடங்கள், தையல் மெஷின், சைக்கிள்கள் ரெலிவிஷன் (Sony) றேடியோ, அம்மி, ஆட்டுக்கல், கோழிக்கூடு, நாய்க்கூடு, லவ்பேட்ஸ் கூடு, ஓவன், ஆர்மோனியம், எலக்ரிக் கிற்றார், கந்தோர் மேசைகள், கதவு நிலை யன்னல்கள் விற்பனைக்குண்டு. இல. 275, பிரதான வீதி (தண்ணீர்தாங்கிக்கு அண்மையில்), யாழ்ப்பாணம். (28973)

### உடன் விற்பனை

புறொயிலர் குஞ்சுகள், வளர்ந்த வகைள் கிவப்பு பேட்டுக்குஞ்சுகள், பிறிமிக்ஸ் வகைகள், கோழி மருந்து வகைகள் விற்பனைக்குண்டு. திருமகள் ஸ்ரோர்ஸ், 705, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (28964)

### மணமகன் தேவை

யாழ். இந்து, படித்த, கௌரவமான குடும்பப் பெற்றோர் தம்து 37 வயதுடைய Asst. Accountant வேலை செய்யும் மகளுக்கு படித்த, தொழில் புரியும் மணமகனைத் தேடுகிறார்கள். சீதனமாக வீடு, நகை, பணம் கொடுக்கப்படும். இல. 592, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28974)

### தவறிவிட்டது

சண்முகம் கிருபனா ஆகிய எனது இல. 626301762V அடையாள அட்டை கடந்த 28-12-93ஆம் திகதி பூநகரி நல்லூர் இறங்குதுறையில் சிறிய பணப்பையுடன் தவறிவிட்டது. இந்த அடையாள அட்டையைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 17, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் சேர்ப்பிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (28968)

## ஆண்டு விழா

யாழ் றோட்டரக்ட் கழகம் தனது 4ஆவது ஆண்டு நிறைவு விழாவை சென்ற வெள்ளிக்கிழமை கொண்டாடியது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற புகைப்பட, மனையியற் கண்காட்சியில் பங்குபற்றிய கலைஞர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு, இரு பார்வையற்ற மாணவர்களுக்கான நிதித்தேவையின் ஒரு பகுதியும் இவ்விழாவில் கையளிக்கப்பட்டன.

### டாக்டரு---


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் —

குழந்தைக்கு ஏற்பட்ட நோயை டாக்டர் டி சொய்ஸா சரியான முறையில் கண்டுபிடிக்காததாலும், அவரது கவலையீனத்தினாலுமே குழந்தை இறந்தது என்றும் — திரு அரசகுலரத்தினா தனது மனுவில் கூறியிருந்தார்.

குழந்தையின் மரணத்தினால் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் அதிர்ச்சி போன்றவற்றுக்கு 50 லட்சம் ரூபா நட்ட ஈடாக தனக்கு வழங்கப்படவேண்டும் என்றும் திரு அரசகுலரத்னா தமது மனுவில் கோரியிருந்தார்,

திரு அரசகுலரத்னா சார்பில் திரு. ரொமேஷ் டி சில்வாவும், டாக்டர் பரியானி டி சொய்சாவின் சார்பில் திரு. பெர்னாட் திலகரத்னாவும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். (உ-எ)


நிறுவன ஆதரவில்

ROTARACT CLUB

யாழ். றோட்டரக்ட் கழகம் நடத்தும் மாபெரும்

## உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள்

விளையாட்டுப் போட்டிகளுக்கான நேர அட்டவணைகளும் போட்டிகள் இடம்பெறும் இடங்களும்.

1. பூப்பந்தாட்டம்: (BADMINTON)
   இடம்: யாழ். இந்து மகளிர் கல்லூரி
   திகதி: ஜனவரி 22, 23, 29, 30
   நேரம்: காலை 8-30 — மாலை 5-30
2. மேசைப்பந்தாட்டம் (TABLE TENNIS)
   இடம்: Y. M. C. A. மண்டபம், சுண்டிக்குளி
   திகதி: ஜனவரி 24, 25, 26, 28
   நேரம்: மாலை 3-00 — 5-30
   ஜனவரி 27 காலை 8-30 — மாலை 5-30
3. கரம் (CARROM)
   இடம்: NEW COMPLEX, யாழ். பல்கலைக்கழகம்
   திகதி: ஜனவரி 31, பெப்ரவரி 1, 2, 3
   நேரம்: மாலை 3-00 — 5-30
4. சதுரங்கம்: (CHESS)
   இடம்: NEW COMPLEX, யாழ். பல்கலைக் கழகம்.
   திகதி: பெப்ரவரி 4, 5, 6
   நேரம்: காலை 8-30 — மாலை 5 - 30
   (பங்கு பற்றும் அனைவரும் 4ஆம் திகதி இந் நேரத்திற்கு சமுகம் அளிக்கவும்)
5. ரெனிஸ்: (TENNIS)

இப்போட்டிக்கான விவரங்கள் போட்டியாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும். மேலுள்ள போட்டிகளுக்கான அட்டவணை ஒழுங்குகளை பின்வரும் இடங்களில் பார்வையிடலாம்.

★ Y. M. C. A. மண்டபம், சுண்டிக்குளி
★ எஸ். எம். பெர்னாண்டோ,
★ விளையாட்டுத்துறை. யாழ். பல்கலைக்கழகம்
★ யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில் நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை
★ யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பொது அறை
★ கலைப்பீடம், வணிக முகாமைத்துவ விளம்பர பலகை
★ செயலாளர், 60 மருதடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.

(28976)


## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | திர்வு: |
| --- | --- |
| 18 — 12 — 1934 | 29 — 01 — 1993 |

### அமரர் பூதர் சின்னராசா

பாசத்தோடு நேசமாக பலரை
கவர்ந்திரே — பண்போடு
மாண்புடனே பாரினிலே நடந்திரே
சுற்றமெல்லாம் கலங்கி நிற்க
கூற்றன் உனை கவர்ந்தானோ
கண்ணீர் பூக்கள் உந்தன்
திருப்பாதங்களிற்கு காணிக்கையாக்குகிறோம்.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

மூளாய் வீதி,
சித்தன்கேணி.

(6777)

## யாழ் இந்துவின் இதய அஞ்சலி

எமது வகுப்பு மாணவனாகிய சி. ஆனந்தவேலின் தந்தையார்

### அமரர் சிவசுப்பிரமணியம்

அவர்களின் மறைவையிட்டு துயரடைகிறோம். அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆண்டு 13E மாணவர்கள்
உயிரியல் பிரிவு

[சி/6983]


சுழிபுரம் மேற்கு

## ஸ்ரீகணேச சனசமூக நிலைய அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. 0877
இரண்டாம் பரிசு இல. 0931
மூன்றாம் பரிசு இல. 0052

ஆறுதல் பரிசுகள்:
0381, 0888, 0086, 0333, 0774

நிர்வாகம்

14 - 01 - 1994. (28980)



யாழ்ப்பாணம் பல்கலைக் கழக

## கலைப்பீட மாணவர்கள் வழங்கும்

# 'பொய்க்கால்' நாடகம்

இடம் : யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு

காலம் : 19-01-1994 புதன் பி. ப. 4.30 மணி
20-01-1994 வியாழன் பி. ப 4.30 மணி

**அன்பளிப்பு: 10/-**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குறிப்பு:
இந்நாடகம் யாழ், குடா நாடெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

"பண்பு தான் எங்கள் செல்வம்"

(சி 6988) (ச)



## யாழ் மாவட்டத்தில் புதிய படங்கள் தருவித்து விநியோகிக்கும் வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கு

19-01-1994 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கலை ஊடக இணைய காரியாலயத்தில் யாழ். மாவட்டத்திற்குள் புதிய படங்கள் தருவித்து விநியோகிக்கும் வீடியோ நாடா விநியோகஸ்தர்களின் கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருப்பதால், இதில் சம்பந்தப்பட்ட வீடியோ நாடா விநியோகஸ்தர்கள் தவறாது கலந்து கொள்ளவும்.

செயலாளர்,
கலை ஊடக இணையம்,
117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

(28975)


## எம் இதய அஞ்சலி

### அமரர் செ. குலேந்திரன்

(கல்வி உத்தியோகத்தர் தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்)

எமது சங்கத்தில் கல்வி உத்தியோகத்தராக பணியாற்றி 15 - 1 - 94 சனிக்கிழமை அன்று எம்மை விட்டு மறைந்த அமரர் செ. குலேந்திரன் அவர்கட்கு எமது சங்கத்தின் சார்பில் இதய அஞ்சலிகளை செலுத்துகின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்.
கைதடி. (சி 6987)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
| --- | --- |
| 17 — 11 — 1957 | 05 — 12 — 1993 |

### அன்ரனி சாள்ஸ்

மாதந்தான் ஒன்றரை ஆகியும்
மறக்கவில்லை நாங்கள் உம்மை
நீங்காத பாசம் வைத்த — உன்
நினைவிலே வாழ்கின்றோம்

குருநகர் மீன் வியாபாரிகள்

(28984)

# இங்கு துன்பங்கள் தீர இறைஞ்சிய காஞ்சி முனிவர்

## பிரார்த்தனையில் மூதறிஞர் குலரத்தினம்

இலங்கையில் நிகழும் சம்பவங்களை அறிந்து எமது துன்பங்கள் தீர வேண்டும் எனப் பிரார்த்தித்து எமது வேதனைகளைக் குறைக்க காத்தல் கடவுளாகிய விஷ்ணுவுக்குப் பூசை செய்து சக்கராயுதத்தை இலங்கைக்கு அனுப்பியவர் ஜெகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

மூதறிஞர் க. சி. குலரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் சார்பில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சரஸ்வதி சுவாமிகளின் நினைவுப்பிரார்த்தனை நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த 12 ஆம் திகதி யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திரு. குலரத்தினம் மேலும் கூறியதாவது.

திரிகரண சுத்தியுடனும் காரியசுத்தியுடனும் ஆதிசங்கரரின் உபதேசத்தைப் பின்பற்றி இந்து சமயத்தின் ஒற்றுமைக்காக வாழ்ந்து உபதேசித்த அந்த அவதார புருஷரின் அருள்மிகு சக்தியால் ஈர்க்கப்படாதவர்கள் இல்லை. எந்தத் துறையைச் சேர்ந்தவராயினும், எந்த நாட்டவராயினும் அவர்பால் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. யோகர் சுவாமிகள் அவரைச் சந்தித்து அவருடன் ஞானப் பரிமாற்றம் செய்தவர். இதன் மூலம் செல்லப்பா சுவாமிகளையும் அவர் நன்கு அறிந்திருந்தார். அவரது உபன்யாசங்கள் கொண்ட நூலை யாழ். மாநகரசபை பேணிக்காப்பது பெருமைக்குரியது. —என்றார்

நல்லை ஆதீன முதல்வரும் யாழ். மாநகர ஆணையாளரும் மங்கல விளக்கேற்றி பிரார்த்தனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்கள். ஆதீன முதல்வரால் வழிபாட்டு ஆராதனையும் நிகழ்த்தப்பட்டது. திருமதி மிதிலா விவேகானந்தனின் கீதாஞ்சலியும் இடம் பெற்றது.

## ஷெல் தாக்குதல்

அளவெட்டி, ஜன. 18

பலாலி, மாதகல் இராணுவ முகாம் பகுதிகளில் இருந்து நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

படையினர் ஏவிய ஐந்து ஷெல்கள் அளவெட்டி, தெல்லிப்பளை, விளான் பகுதிகளில் விழுந்து வெடித்தன. அதேவேளை சில ஷெல்கள் யாழ், நகரப் பக்கமாகவும் கூவிக்கொண்டு செல்வதைக் கேட்க முடிந்தது. (உ-13)

## ஈழ அகதிகளை--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னோடியாகக் கொண்டு, ஸ்கன்டிநேவியன் நாடுகள் உட்படப் பல ஐரோப்பிய நாடுகள் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான ஒப்பந்தங்களைச் செய்யும் என்று கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி திரு பீற்றர் நிக்கலஸ் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகள் பலவும் சுவிஸ் - ஸ்ரீலங்கா ஒப்பந்தம் போன்ற உடன்படிக்கைகளை செய்வதில் ஏற்கனவே அக்கறை கொண்டிருந்ததாகவும் விரைவில் அவை இது விடயத்தில் செயற்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை —

சுவிஸில் அரசியல் புகலிடம் மறுக்கப்பட்டவர்களின் முதலாவது தொகுதியினர் மார்ச் மாதம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்த உடன் படிக்கையின் கீழ் திருப்பி அனுப்பப்படுபவர்கள் இலங்கையில் மோதல் நடக்கும்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படமாட்டார்கள்.

திருப்பி அனுப்பப்படும் எல்லோருக்கும் இலங்கை பயணப் பத்திரமும் 3 மாத ஊதியமும் வழங்கப்படவுள்ளன. திருப்பி அனுப்பப்படுபவர்கள் இம்சைப்படுத்தப்படமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் நிலைமையைக் கண்காணிக்கும்,

திரு பீட்டர் நிக்கலஸ் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

சுவிட்சர்லாந்திலிருந்து திருப்பி அனுப்பப்படும் இலங்கை அகதிகள் விடயத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அமைதியான கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும். நாடு திருப்பி அனுப்பப்படுவோரின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை எதிர் நோக்கும் அகதிகள் விடயத்தில் நாம் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்வோம்.

இந்த உடன்படிக்கையை நாம் வரவேற்கின்றோம். உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் உதவும் இந்த உடன்படிக்கை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் அது பெரும் வெற்றியாகும் என்றார்.

(அ-த-எ)


## பலாலி புனித செபஸ்தியார் வருடாந்த உற்சவம்

இடம்பெயர்ந்த பலாலி மக்களால் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் 20 — 01 — 1994 வியாழக்கிழமை திருவிழா கொண்டாடப்படவுள்ளது. திருதின வழிபாட்டுடன் ஆரம்பமாகி வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு திருநாள் திருப்பலிப் பூசை இடம்பெறும்.

பங்குத் தந்தை
சுன்னாகம்

(6907)



## பிற்போடப்பட்டுள்ளது

07. 01. 1994 ஆரம்பமாக இருந்த கலைப்பீட இரண்டாம் தவணையானது 17. 01 1994 க்குப் பிற்போடப்பட்டதனால் யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினால் 19. 01. 1994 புதன்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பைப் பிற்போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இச் சீட்டிழுப்பு மீண்டும் எதிர் வரும் 16.02.1994 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் "அதிர்ஷ்டம் பார்க்கப்படும்'!.

சமூக விஞ்ஞான மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்,

(28982)



வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழக

## கல்லூரி மாணவர்களுக்கான அறிவித்தல்

24/01/94 இல் புறப்பட உள்ள மேற்படி மாணவர்கள் நாளை 19/01/94 புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில், பல்கலைக்கழக, தேசிய அடையாள அட்டைகளுடன் ஒன்று கூடுமாறு கேட்கப்படுகிறார்கள். அன்றைய தினம் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்படும்.

முதலாம் வருட
மாணவர்கள்,

(28979)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இயலாமையின் அந்தலையில்..!

இந்திய இராணுவத்தை மீண்டும் அழைப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் முயற்சி எடுத்ததாகவும், ஆனால் இந்தியா அதனை விரும்பவில்லை என்றும் கொழும்பில் செய்திகள் வெளியாகி உள்ளன.

புதுடில்லியில் இவ்வாரத்தில் இந்திய - இலங்கை ஆணைக்குழுக் கூட்டம் நடைபெற இருந்தது. பிரஸ்தாப ஆணைக்குழுக் கூட்டத்தில் இந்தியப்படையை மீண்டும் அழைக்கும் சாத்தியம் குறித்து அமைச்சர் ஹமீத் இந்திய அமைச்சர் வெளியுறவு அமைச்சருடன் பேச இருந்தார். ராஜீவ் காந்தி வழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியா சம்பந்தப்படுத்தி இருப்பதைச் சாதகமாக வைத்து இந்திய இராணுவத்தின் உதவியைக் கேட்பதே ஸ்ரீலங்கா அரசின் உத்தேசமாக இருந்தது. ஆனால் இந்தியா அதனை விரும்பவில்லை: —என்ற விவரங்கள் கொழும்புப் பத்திரிகை ஒன்றில் வெளியாகி இருந்தன.

ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் அந்தச் செய்தியை முழுமையாக மறுத்துள்ளது.

நெருப்பில்லாமல் புகையுமா? தனது இரகசியம் வெளிவந்துவிட்டால் அதனை அரசு மறுக்காமல் என்ன செய்வது?

ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கு இந்திய இராணுவத்தை மீண்டும் அழைப்பது என்ற விவகாரம் ஒன்றும் புதியதல்ல. 1990 ஜூன் மாதத்தில் வடக்கு - கிழக்கில் யுத்தத்தைப் பிரகடனம் செய்தும், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் வெல்வதற்கு முடியவில்லை; தோற்கடிக்க முடியாது என்று உணரும் போதெல்லாம் சிங்களத் தலைவர்கள் பலரும் இந்தியாவிடமிருந்து படை உதவி பெறுவது குறித்தே பிரஸ்தாபித்து வந்தார்கள்.

இந்தியப்படையைத் திருப்பி அனுப்பியவர் பிரேமதாசா என்பதால், அவரது காலத்தில் இவ்விவகாரம் பெரிதாக வெளியே 'எடுபடவில்லை'! ஆனால் அவரது மரணத்துக்குப் பின்னர், விடுதலைப் புலிகளின் கைகளில் ஸ்ரீலங்காப்படைகள் தோல்வியுறும் போதெல்லாம், இந்திய இராணுவத்தை மீண்டும் அழைக்க வேண்டும் என்ற கருத்து பெரிதாக ஒலித்து வந்தது.

பூநகரித் தோல்வியின் பின்னர் அந்தக் கருத்து மேலும் வலுப்பெறத் தொடங்கியது. ஸ்ரீலங்காப் படைகளால் விடுதலைப் புலிகளை வெல்வது அல்லது ஒடுக்குவது இயலாத காரியம் என்ற எண்ணம் தெற்கில் மேலோங்கியது. அவர்களை வெல்வதானால் இந்தியப் படையின் உதவி தேவையே என்று உயர்மட்டத்தில் உள்ள புத்திசீவிகள் வட்டாரங்களில் கூடப் பேசப்பட்டது.

குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கிவரும் ''ஜாதிக சிந்தனய'' இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் குணதாசா அமரசேகர போன்றவர்கள் இந்தியப் படையை மீண்டும் அழைப்பது குறித்து ஆலோசனை வழங்கியிருக்கலாம்.

இன்னொரு நாட்டைத் துணைக்கு அழைத்துத் தான் விடுதலைப் புலிகளை ஒடுக்க முடியும் என்ற அவமானத்தை ஏற்றாலும், தமிழர்கள் சுதந்திரமாக உரிமைகளுடன் வாழ்வதையோ அல்லது அவர்கள் தமது தாயகத்தை மீட்டுக் கொள்வதையோ சகித்துக் கொள்ள முடியாது என்பதே அவர்களது நிலைப்பாடு.

விடுதலைப் புலிகளை, தனித்து நின்று இராணுவ ரீதியாக ஒடுக்க முடியாது என்று உணர்ந்தால், தோல்வியை ஒப்புக்கொண்டு அரசியல் தீர்வுக்கு வருவது தான் நியாயம். ஆனால் தனது இயலாமையை ஒப்புக்கொள்ளவோ, தமிழர்களின் உரிமைகளை வழங்கவோ சிங்களத் தலைவர்கள் விரும்பவில்லை என்பதே இந்தியப் படையை மீண்டும் அழைக்கும் உத்தேசத்தின் வெளிப்பாடாகும்!

---

பிரிட்டனிடமிருந்து பொறுப்பேற்ற முதல்நாளே

# ஹொங்கொங் சட்டசபையை, சீன அரசு கலைத்து விடும்!

ஹொங்கொங், ஜன. 18

ஹொங்கொங்கின் இறைமையை சீனா பெற்ற முதல் தினமே அந்த நாட்டின் சட்டசபையை தாம் ஒழித்துவிடப் போவதாக பீஜிங் அரசு அறிவித்துள்ளது.

தற்போதைய உடன்பாட்டின் படி, 1-1-1997 இல் ஹொங்கொங்கை பிரிட்டன், சீனாவிடம் கையளிக்கும்.

அன்றைய தினமே ஹொங்கொங்கில் உள்ள சட்டசபை மற்றும் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டுவிடும் என்றும்—

அவை பின்னர் சீன அரசின் ஆட்சியின் கீழ் புனரமைப்புச் செய்யப்படும் என்றும்— சீன அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பிரிட்டனின் குடியேற்ற நாடாக ஹொங்கொங் தற்போது இருந்து வருகின்றது.

பிரிட்டனும் சீனாவும் 1984 இல் செய்து கொண்ட உடன்பாட்டின் படி, ஹொங்கொங் மீண்டும் சீனாவிடம் 1-1-1997இல் ஒப்படைக்கப்படும்.

அன்றைய தினம் ஹொங்கொங் மீதான தமது இழந்த இறையாண்மையை சீனா பெறுகின்றது.

(இ-எ)

### மாற்று இரத்தம் மூலம்

## எய்ட்ஸ் ஏற்பட்டோருக்கு ஜேர்மன் அவசர உதவி

பொன், ஜன. 18

மாற்று இரத்தம் ஏற்றியதன் மூலம் எய்ட்ஸ் நோய்க்கு ஆளானவர்களுக்கு இம்மாதம் முதலாம் திகதி முதல் அவசர உதவிகளை வழங்க ஜேர்மன் அரசு தீர்மானித்துள்ளது.

எச். ஐ. வி. வைரஸ் காவிகளுக்கு 590 டொலரும் — எய்ட்ஸ் நோய் கண்டவர்களுக்கு 1180 டொலரும் மாதாமாதம் வழங்கப்படும் என்று ஜேர்மன் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நோயாளர்களினால் பாதிக்கப்பட்ட அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இந்த நிதி உதவிபெற உரித்துடையவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு இரத்த வங்கிகள் எய்ட்ஸ் நோய் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத இரத்தத்தை விநியோகித்த சம்பவம் கடந்த அக்டோபரில் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து — இந்த அவசர நிதி உதவி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

## சதாம் கொலை முயற்சியில் அவரின் நெருங்கிய சகாக்கள்

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனைக் கடைசியாகக் கொலை செய்ய முயற்சித்த சம்பவத்தில், அவருக்கு மிகவும் நெருங்கிய சகாக்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இது ஈராக் அரசாங்கத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக ஏ. பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இச்கொலை முயற்சி தொடர்பாக ஜனாதிபதி ஹுசேனின் உள்ளக குழுவைச் சேர்ந்த உபஜனாதிபதி ரமடான், பிரதி பிரதம மந்திரி தாரிக் அஸிஸ், பாதுகாப்பு அமைச்சர் அலிஹசன் மஜித் மற்றும் ஜனாதிபதி சதாம் ஹுசேனின் ஆலோசகரும் பிரதம மெய்க் காப்பாளருமான ரசாத் அமின் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர் என்றும்—

எனினும் அவர்களில் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

தாரிக் அஸிஸ், ஈராக்கின் சர்வதேசப் பேச்சாளரும் ஆவார். பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதியின் மருகர் ஆவார். பிரதம மெய்ப்பாதுகாவலான அமின் ஜனாதிபதியின் மைத்துனர் ஆவார்.

ஜனாதிபதிஹுசேன் கவசம் பொருத்தப்பட்ட மெர்சிடஸ் பென்ஸ் காரில் சென்று கொண்டிருந்த போது வீதியில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்தது. அப்போது ஜனாதிபதி உயிர் தப்பினார். மெய்ப்பாதுகாவலர் ஒருவர் காயமடைந்தார்.

ஜனாதிபதியின் பயணம் அவருக்கு மிக நெருங்கிய ஒரு சிலருக்கு மட்டுமே முன் கூட்டியே தெரிந்திருந்தது.

இச் சம்பவம் தொடர்பாக குறைந்தது 60 சிரேஷ்ட இராணுவ, பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியின் இரு புதல்வர்கள் குவாளி மற்றும் உதேஸ் ஆகியோர் இவ் விசாரணையை நடத்தி வருகின்றனர்.

இதே வேளை—இக்கொலை முயற்சி தொடர்பாக இருபது ராணுவ அதிகாரிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-எ)

## நியமனம்

தென்மராட்சி, ஜன. 18

பளை வைத்தியசாலைக்கு நுண்கிருமி பரிசோதனையாளர் (மைக்ரோபயலொஜிஸ்ற்) ஒருவர் இம் மாதம் முதலாம் திகதி முதல் யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(க-117)

## கிட்டுவுக்கு நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 18

கல்வியங்காட்டு சந்தியில் உள்ள லெப். செல்லக்கிளி அம்மான் நினைவாலயத்தில் தளபதி கேணல் கிட்டுவின் திருவுருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

ஈகைச்சுடரை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஏற்றி வைத்தார்.

கேணல் கிட்டுவின் திருவுருவப்படத்துக்கு நிதர்சனப் பொறுப்பாளர் திரு. ஜவான் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

(இ-17)

## வெற்றிக்கும் தோல்விக்கும் இனி கூட்டுப் பொறுப்பு

### புதிய தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 18

இராணுவத்தில் இதுவரை நிலவிய ''நான்'', ''எனது'', ''என்னுடைய'' என்ற பாணிக்கு புதிய தளபதி ஜெரி டி சில்வா முற்றுப்புள்ளி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

''நான்'' என்பது ''நாங்கள்'' என்று மாற்றப்பட வேண்டும். ''வெற்றி''யைப் பொறுத்தவரை அதற்கு ''நானே'' பொறுப்பு என்று கூறுவதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

எல்லா நடவடிக்கைகளும் கூட்டுப் பொறுப்பாக இருக்கும் —

இவ்வாறு புதிய தளபதி ஜெரி டி சில்வா பதவி ஏற்ற பின்னர், இராணுவ அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார். புதிய தளபதியின் கூற்று இனிமேல் இராணுவத்தில் ''நான் செய்தேன்'' என்ற பாணி இனியும் கடைப்பிடிக்கப்படமாட்டாது என்பதை உணர்த்துகின்றது — என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-எ)

## நெல் அறுவடைக்கு பின் சிறுதானிய உற்பத்தி

யாழ்ப்பாணம், ஜன. 18

வயல்களில் நெல் அறுவடை முடிந்தவுடன் சிறுதானியப் பயிர்களை விளைவிப்பதற்கான நடவடிக்கைகள் இப்போதிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நிலக்கடலை, பயறு, கௌபி, உழுந்து போன்றவற்றை ப. நோ. கூ; சங்கங்கள் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சமாசம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சிறுதானிய பயிர்ச் செய்கையை வயல் நிலங்களில் மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள் தமக்குத்தேவையான சிறுதானியங்களின் விவரங்களை தத்தமது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் கேட்டுள்ளது.

(இ-17)

## விவேகானந்தர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 18

கொழும்பு, இராமகிருஷ்ண மிசன் ஆதரவுடன், இராமகிருஷ்ணாலயம் ஒழுங்கு செய்துள்ள, சுவாமி விவேகானந்தரின் சிக்காகோப் பிரசங்க நூற்றாண்டை ஒட்டிய பேச்சுப் போட்டிகள் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட உள்ளன.

யாழ். கல்வித்திணைக்களம் இதனை நடத்தவுள்ளது.

பாடசாலை மட்டங்களில் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்பாகவும், கோட்ட மட்டத்தில் பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்பாகவும் இப்பேச்சுப்போட்டியை நடத்தும்படி சகல பாடசாலை அதிபர்களையும், கோட்டக் கல்விப் பிரதிப் பணிப்பாளர்களையும் யாழ். கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கேட்டுள்ளார்.

(இ-17)

## இன்று சம்பளம்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களின் நவம்பர் மாதச் சம்பளம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படும்.

(எ)

## தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 18

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட இறுதி ஆண்டுப் பரீட்சையில் (1993) தமிழ் மாணவர் ஒருவர் முதலாவதாகவும் முதலாம் வகுப்பிலும் சித்தி அடைந்து நான்கு பரிசுகளும் தங்கப் பதக்கமும் பெற்றுள்ளார். வெளிநாட்டு புலமைப்பரிசிலும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

நுணாவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சென்யோன்ஸ்கல்லூரி பழைய மாணவருமான நா. குமரேசன் என்பவரே சாதனை படைத்த மாணவர் ஆவார். (இ)

## கோழிகளுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, ஜன. 18

சாவகச்சேரி விவசாய சேவை நிலைய புத்தூர் சந்தி அலுவலகத்தில் வியாழக்கிழமை முதல் கோழிகளுக்குத் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-117)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஜன. 18

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய இரண்டாவது நினைவு தின இலட்சார்ச்சனை இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் கோவில் கொண்டுள்ள மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும். (க-51)

* * *

எழுது மட்டுவாழ் - விழபழை அருள்மிகு ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் கோயில் மஹா சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறும்.

(எ)

## மதுரை நகரில் புலிகள் ஊடுருவல்!

### எந்நேரமும் தாக்கலாமாம்

சென்னை, ஜன. 18

மதுரை நகரில் விடுதலைப் புலிகளின் மூன்று முக்கிய புள்ளிகள் நுழைந்துள்ளனர் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும்—

அவர்கள் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என்றும் தமிழ் நாடு சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் நேற்று தெரிவித்தார்.

உளவு அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் ஆளுநர் சென்னாரெட்டியின் தஞ்சை விஜயம் ரத்துச் செய்யப்பட்டது. இது தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டது என்ற தமது கட்சியின் குற்றச்சாட்டை நிரூபித்துள்ளது என்றும் அவர் கூறினார்

(உ-எ)

---

# வட தமிழீழத்தில் தேங்காய் உற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தி காண உழைப்போம்

'வடதமிழீழத்தின் தெங்குச் செய்கையில் ஒரு நோக்கு' என்ற தலைப்பில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட கட்டுரையை இங்கே தருகின்றோம்.

தேங்காய் எமது மக்களின் அன்றாட உணவுத் தேவையுடனும் கலை கலாசாரத்துடனும் தொன்று தொட்டு முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

இலங்கையில் தெங்குச் செய்கைக்குட்படுத்தப்பட்டுள்ள மொத்தப்பரப்பளவு சுமார் 1 03 மில்லியன் ஏக்கர்களாகும். இப்பயிர்ச் செய்கையானது ஈரவலயத்தில் 20%. இடைப்பட்ட வலயத்தில் 51%. உலர்வலயத்தில் 29% என்ற அடிப்படையில் உள்ளது.

வட தமிழீழத்தின் தென்னை பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 84,192 ஏக்கர் ஆகும். இதில் 70%மான தென்னைகளே காய்க்கும் நிலையில் உள்ளன. ஏக்கருக்கு 60 தென்னைகள் படி வடதமிழீழத்தில் உள்ள மொத்தத் தென்னைகள் 20,51,500 எனவும், இதில் 70% காய்க்கும் நிலையில் உள்ளதாகவும் கருத வேண்டும். அத்துடன் ஒரு தென்னையில் வருடம் ஒன்றிற்கு சராசரியாக 60 - 80 தேங்காய்களே பெற முடியும். இவற்றுடன் வடதமிழீழ சனத்தொகை 1.39 மில்லியனாக கருதப்பட வேண்டும். (1993 ஆண்டிற்கான கணிப்பீடு)

நன்கு பராமரிக்கப்பட்ட நான்கு தென்னைகள் மூன்று மனிதர்களின் ஒரு வருடத் தேங்காய் தேவையை பூர்த்தி செய்யும் எனவும் கொள்ளல் வேண்டும்.

### மண் ஈரலிப்பை பாதுகாத்தல் முக்கியமானது

உலர் வலயத்தின் சராசரி விளைவு மற்றய வலயங்களை விடக்குறைவு என்றாலும் இங்குள்ள மரங்களின் உற்பத்தித் திறன் தற்பொழுது கிடைக்கும் விளைச்சலை விட கூடுதலானது. தென்னை மரத்தின் இந்த உற்பத்தித் திறனை எமதாக்கிக் கொள்வதற்காக சில பயிர்ச்செய்கைப் பராமரிப்பு முறைகளை இப்பொழுதிருந்தே கையாளுதல் அவசியமாகும்.

பயிர்ச்செய்கைப் பராமரிப்பு முறைகளில் உலர் வலயத்தை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியமானது மண் ஈரலிப்பை பாதுகாத்தல் ஆகும். பசளைப் பிரயோகத்திலும் பார்க்க மண்ணில் ஈரத்தைப் பாதுகாத்தலுக்கு முன்னுரிமை வழங்கல் அவசியம் ஆகும்.

உலர் வலயத்தின் கோடை காலத்தில் மண்ணில் ஈரம் வெகுவாக குறைந்து காய்ந்து போகின்றது. இக்காலங்களில் விரியும் பாளைகளில் இருந்து குரும்பட்டிகள் உதிர்ந்து விழுகின்றன. அதனாலேதான் வருடத்தின் சில காலங்களில் தேங்காய்களின் உற்பத்தி குறைந்தும், கூடியும் காணப்படுகின்றது. விலையும் அதற்கேற்ப மாறுபடுகின்றது. இதை நிவர்த்தி செய்வதற்கு கீழ்வரும் ஈரப்பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்தல் அவசியமாகும்.

பாதுகாப்பு முறைகள்

அ) பெருமழைக்கு முன்பு பொச்சு மட்டை குழிகளை அமைத்தல் பெருமழைக் காலம் தொடங்குவதற்கு முன்னர் இக்குழிகளை அமைக்க வேண்டும். மழைக்காகக் காத்திருக்கக் கூடாது. தென்னை மர அடியிலிருந்து 2 மீற்றருக்கு (6') அப்பால் ½ விட்ட சுற்றளவில் 3' ஆழமான குழிகளை அமைத்து பொச்சினால் நிரப்பி மண்ணால் மூடி விடுதல் வேண்டும். பொச்சு குழியில் நிரப்பும் போது தும்புப்பக்கம் மேல் நோக்கி இருக்கும் வகையில் அடுக்கினால் கூடிய நீரை உறிஞ்சி வைத்திருக்க வாய்ப்புண்டு.

ஆ) தென்னை அடி மரத்தைச் சுற்றி சுமார் 2 மீற்றர் வட்டத்திற்குள் உறுதியான நல்ல பத்திரக்கலவையினால் மூடுதல். மழைக்காலம் முடியும் தறுவாயில் இந் நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

இ) பெரும் மழை வீழ்ச்சி தொடங்கு முன் நிலச்சரிவிற்கு எதிராக மண்ணின் மேற்பகுதியை சுமார் 6''-9'' ஆழம் வரை உழுது விடுதல். இதனால் மழை நீரை கூடியளவு நிலத்திற்கு அடியில் கொண்டு செல்ல முடியும். கால போகத்தில் முதல் மழை பெய்தபின் உழத் தொடங்கலாம். (மாட்டுக் கலப்பை போதுமானது).

ஆகவே மேற்குறிப்பிட்ட ஈரப்பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்க கோடை காலங்களில் விரியும் ஒவ்வொரு பாளையிலிருந்தும் விளைச்சலை எடுப்பது இலகுவாக இருக்கும் அவசியமானதும் தேவையானதும் ஆகும்.

### பசளைப் பிரயோகம்

எமது வரண்ட பிரதேசத்தில் பசளைப் பிரயோகத்தை கவனத்திற்கு எடுத்துக் கொண்டால் இரசாயன உரத்தைவிட இயற்கை உரத்தை (சேதனப்பசளை) பாவிப்பது மிகவும் நல்லது. ஏனெனில் இயற்கை உரம் மரத்திற்கு வேண்டிய போசாக்கை அளிப்பதுடன் மண்ணின் சேதன உறுப்பு வீதத்தை கூட்டி (உக்கல்) மண்ணின் ஈரலிப்புத் தன்மையை மேம்படுத்தி வரண்ட காலத்திலும் தாக்குபிடிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துகின்றது. இயற்கை உரத்தை மரத்தில் இருந்து ஒரு மீற்றருக்கு (3') அப்பால் ஒரு மீற்றர் அகலத்தில் ஒரு அடி ஆழத்துக்கு வட்டமான சால் அமைத்து பின்வரும் அளவுகளில் போடுதல் வேண்டும்.

கீழ்வரும் சேதனப்பசளைகளில் ஒன்றினை தென்னை மரமொன்றிற்கு இட வேண்டும். மாட்டெரு 30 கிலோ, ஆட்டெரு 13 கிலோ, கோழியெரு 25 கிலோ பின்பு சாலை மேல் மண்ணால் மூடிவிடல் வேண்டும். அத்துடன் இப்பரப்பைச் சுற்றி பத்திரக் கலவை இடல் அவசியம்.

இம்முறையைவிட வீட்டுத் தோட்டத்திலும் மற்றும் மாட்டுப்பட்டி உள்ள தோட்டங்களிலும் மாடு கட்டுவதன் மூலம் தென்னை மரத்திற்கு வேண்டிய போஷாக்கை மிகவும் சிறந்த முறையில் கொடுக்கலாம். ஒவ்வொரு மரத்திலும் ஒருசோடி மாடுகளை 8 கிழமைக்கு இரவில் கட்டினால் போதுமானது. பின்பு தென்னை அடியைச் சுற்றி சுமார் 2 மீற்றர் (6') வட்டத்திற்கு அந்த மாட்டின் எருக்களை மண்ணினால் மூடி பத்திரக்கலவை இடுதல் அவசியமாகும்.

இவற்றைவிட கிளிசிறிடியா, இப்பில் இப்பில் போன்ற பசுந்தாள் பசளைப் பிரயோகமும் தென்னை மரத்திற்கு வேண்டிய நைதரசனை அளிப்பதோடு மட்டுப்படுத்தப்பட்ட அளவு மற்றைய போஷாக்கு சத்துக்களையும் கொடுக்கின்றது சுமார் 30 கிலோ கிளிசிறிடியா குழைகளை மரத்தில இருந்து 2 மீற்றர் (6') வட்டத்திற்கு மண்ணினுள் தாட்டுவிடுதல் வேண்டும்.

### கருவண்டு, செவ்வண்டை கட்டுப்படுத்த வேண்டும்

எமது பிரதேசத்தில் கருவண்டின் தாக்கம் பரவலாக எங்கும் காணப்படுகின்றது. வயதுக் கட்டுப்பாடின்றி எல்லா மரங்களையும் இவ்வண்டு தாக்கி ஓலைகளை விசிறிபோன்ற அமைப்பில் வெட்டுகின்றது. ஓலைகள் தாக்கப்படுவதால் தொடர்ந்து வரும் வருடங்களில் விளைச்சல் பாதிப்படைகின்றது.

இதைக் கட்டுப்படுத்துவதற்கு கருவண்டு முட்டை இட்டு பெருகும் முக்கிய இடங்களான இறந்த, பிரயோசன மற்ற உதவாத தென்னை, பனை மரங்களையும் மர அடிகளையும் எரித்து விடுதல் வேண்டும். எமது பிரதேச மக்கள் ஒவ்வொருவரும் காலத்திற்கேற்ப கவனத்திற்கு எடுத்து கருவண்டின் பெருக்கத்தை தடுக்க உதவவேண்டும். இளம்பிள்ளைகளில் இருந்து கருவண்டு விலகிச் செல்வதற்கு ஒவ்வொரு தென்னோலை இடுக்குகளிலும் ஒவ்வொரு பூச்சி உருண்டையை வைக்கலாம். அல்லது காபோபியுறாக் குறுணலை (30கிராம்/மரம்) பூச்சி உருண்டைகளுக்குப் பதிலாக தூவி விடலாம்.

அடுத்த முக்கியமான பீடையானது செவ்வண்டின் தாக்கம் ஆகும். இதன் புழுப்பருவம் இளம் மரங்களின் உள் பாகத்தைச் சாப்பிட்டு மரத்தையே நாசப்படுத்த இறுதியில் மரம் பட்டுவிடுகின்றது. இதைக்கட்டுப்படுத்துவதற்கு 10 மி. லீற்றர் மொனோகுறோரொபொஸ் என்னும் மருந்தை நீர் கலக்காமல் உட்செலுத்த வேண்டும். இம் மருந்து மிகவும் நச்சுத்தன்மையானது. ஆகவே இம்மருந்து செலுத்தி இரண்டு மாதங்களுக்கு தேங்காய்கள் அல்லது இளநீர்த் தேங்காய்கள் பாவனைக்கு எடுக்கப்படக்கூடாது என்பதை கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

எமது பகுதியில் இருக்கின்ற தென்னை மரங்களை மேற்குறிப்பிட்டவாறு எளிய முறையில் பரிபாலனம் செய்துவரின் ஒவ்வொரு மரத்தில் இருந்தும் உச்ச விளைச்சலைப் பெறமுடியும். வடதமிழீழத்தின் தேங்காய் உற்பத்தியின் சுயதேவைப் பூர்த்திக்கு அடிகோலுவதற்கு அனைவரும் உறுதிபூணுவோமாக!

(எ)

**நீரின்றிப் போனால் நீயுமில்லை நானுமில்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீத, நடன, மற்றும் சித்திர ஆசிரியர் பதவிகள் வெற்றிடம்

## 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்

கொழும்பு, ஜன. 18

அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச் சேவைச் சபை அரசாங்க பாடசாலைகளில் கீழைத்தேச சங்கீத, நடன மற்றும் சித்திர ஆசிரியர்களுக்கான பதவிகளுக்கு ஆட்சேர்க்க ஆண் பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேற்படி சபையின் உறுப்பினர் திரு. ஜீ. ஜெயக்குமார் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தி ஒன்றில் இதனை அறிவித்துள்ளார்.

ஜனவரி 24ஆம் திகதி விண்ணப்ப முடிவு திகதியாகும்.

இதேவேளை, கல்வி அமைச்சின் கீழுள்ள கல்வி நிறுவனங்களில் உதவி விடுதி முகாமையாளர், விடுதி முகாமையாளர், உதவி விடுதி மேற்பார்வையாளர், விடுதிமேற்பார்வையாளர் ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று திரு. ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

இதன் விண்ணப்ப முடிவு திகதி ஜனவரி 28 ஆம் திகதி ஆகும்.

மேற்படி ஆட்சேர்ப்புகளுக்கான நடைமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விவரங்கள் 24-12-93, 31-12-93 வர்த்தமானிகளில் வெளியாகியுள்ளன.

இவற்றின் பிரதிகளை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள 'உதயன்'' விளம்பரப் பணிமனையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். (க)

### இன்று

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

★ ★ ★

பனை, தென்னைவள கூட்டுறவு நிறுவனங்களின் வடமாகாண மட்டத்திலான ஒருங்கிணைந்த உற்பத்தி நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பனை, தென்னைவள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனையில் நடைபெறும். (த-162)

### பென்சன் வவுச்சர் வந்து சேர்ந்தன

யாழ் மாவட்ட ஓய்வூதியர்களின் ஜனவரி மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள்' றுகுணு கப்பலில் இங்கு வந்து சேர்ந்துள்ளன.

இம்மாதத்துக்கான, இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு நிவாரண முத்திரைகளும் இந்தக் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன. (உ-5-109)

### ஆஸ்பத்திரிக் குழு கொழும்பு விஜயம்

யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து நேற்று ஆஸ்பத்திரி பணிப்பாளரின் தலைமையில் நால்வர் கொண்ட உயர்மட்ட தூதுக்குழுவொன்றுகொழும்பு தலைமைக்காரியாலயத்திற்கு. புறப்பட்டுச் சென்றது. (உ-15)

# பல்கலை. மாணவர் பிரச்சினை: விசாரிக்க சுதந்திரக் குழு

## உடனடியாக நியமிக்க உயர் கல்வி அமைச்சு முடிவு

பல்கலைக் கழகங்களில் ஏற்படும் பிணக்குகள், மாணவர்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக விசாரித்து அவைகளைத் தீர்த்து வைப்பதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக சுதந்திரமான குழு ஒன்றை உடனடியாக நியமிப்பதற்கு உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

விரிவுரைகள் நடத்தப்படாமை, வதிவிடக் குறைபாடுகள், ஆய்வு கூடங்களில் நிலவும் உபகரணப்பற்றாக்குறை, விரிவுரையாளர் பற்றாக்குறை உட்பட பல குறைபாடுகள் குறித்துச் சரியான தகவல்களைச் சேகரிப்பது மேற்படி குழு ஒன்றை நியமிப்பதன் நோக்கம் என உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

மேலும் —

மாணவரிடையே பிணக்கு ஏற்படுதல் மற்றும் அச்சுறுத்தல் முதலானவற்றை தவிர்த்தல், மாணவரின் சுதந்திரமான உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்தும் இக் குழுவிடமிருந்து பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

# பல்துறைசார் கல்வியை மாணவர் நாடவேண்டும்

## கல்விப் பணிப்பாளர் வலியுறுத்து

பல்கலைக்கழகம் செல்லும் ஒரே நோக்கத்துடனேயே கல்வி கற்கும் இன்றைய நிலைமை மாறவேண்டும். ஏனைய துறைசார் கல்வியைப் பற்றியும் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் தெற்கு வலயக் கல்விப பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி இவ்வாறு கூறினார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை கல்வித் திணைக்களத்துடன் இணைந்து கூட்டுறவுச் சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களுக்கென நடத்திய தொடர் பயிற்சி மதிப்பீட்டின் இறுதி நாளில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. வை. செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் செல்வி பெரியதம்பி மேலும் கூறியதாவது.

சமுதாயத்தில் உள்ள மக்கள் சிந்தித்து செயலாற்றுவதன் மூலமே கல்வியிலான இந்த நிலையை மாற்ற முடியும்.

கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்தில் உள்ள மக்களை ஒன்றுதிரட்டி அவர்களை உற்பத்தியில் ஈடுபடுத்த வேண்டும். குறிப்பாக, பாமர மக்களை அணிதிரட்டி அவர்களின் தேவைகளை நிறைவேற்றி சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உதவவேண்டும்என்றார்.

இந் நிகழ்வில் யாழ். கல்வித் திணைக்களத்தின் முறைசாராப் பிரிவுப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. சுப்பிரமணியம், கூட்டுறவு சபையின் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (க-162)

# எலும்புக் கூடுகளை தோண்டி அரசியல் லாபம் பெற முயற்சி

## அனுரா பண்டாரநாயக்கா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 18

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தமது கொள்கைத் திட்டம் எதனையும் மக்கள் முன் வைக்காமல், புதைகுழிகளில் எலும்புக்கூடுகளைத் தோண்டி அதன் மூலம் அரசியல் லாபம் பெற முயற்சிக்கிறார்கள்: கல்வி உயர் கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டி உள்ளார்.

பெந்தறை—எல்பிலிபிட்டிய தேர்தல் தொகுதியில் உள்ள ஒரு குடியேற்றத் திட்டத்தின் வீதியோகத்தை ஆரம்பித்து வைத்து அவர் உரை நிகழ்த்தினர்.

தமது கணவரான விஜய குமாரணதுங்காவின் படுகொலை குறித்து விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுக்காத மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தற்போது சூரியகந்த எலும்புக்கூடுகள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு கோரி வருவது வேடிக்கைத்தானது என்றும் அனுரா பண்டாரநாயக்கா கூறினார். (இ)

# விளையாட்டு நிகழ்வுகள்

எச். என். பி. சுற்று வெற்றிக் கிண்ணத்துக்காக ஹட்டன் நஷனல் வங்கி யாழ். மாவட்டக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் ஆரம்பமாகியது.

இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு,

★ பிற்பகல் 3.00 மணி;- சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் ஜொனியன்ஸ் சிவப்பு அணி

★ 4.15 மணி:- சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் அணி

நளைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி:- ஜொனியன்ஸ்:- கறுப்பு அணி எதிர் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி

★ 4.15 மணி:- யாழ். பல்கலைக்கழக ஆண்கள் அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி. (உ)

★ ★ ★

வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் வி. க அணியை எதிர்த்து மந்துவில் மரிக்கார் வி. க. அணி மோதும்

நாளைபிற்பகல் 3 மணிக்கு இதே மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பாடும் மீன் வி. க. அணியை எதிர்த்து மாவத்தை வி. க அணி மோதும். (உ)

மாணவரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதைகுழியில் கண்டெடுக்கப் படவில்லை என்று தெரிவித்திருந்தனர். உறுதியான சாட்சிகளின் மூலமாக அல்லாது வேறு வழிகளில் இம்முடிவுக்கு வரவியலாது என்று சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (உ-6)


நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

அதிர்ஷ்ட

லாபச் சீட்டிழுப்பு

நல்லூர் இளங்கலைஞர் மன்றம்

19-01-1994 புதன்கிழமை மாலை 5.00 மணி

தலைமை:

என். கே. குலசிங்கம் (தலைவர், நல்லூர் பிரதேச வர்த்தக சங்கம்)

பிரதம விருந்தினர்கள்:

திரு திருக்குமரன் (அரசியல் பொறுப்பாளர், வலிகாமம்)

திரு. வேந்தன் (சதீஸ்) (பொறுப்பாளர் நல்லூர் வட்டவை)

திரு இமையவன் (பொறுப்பாளர் தொழிற் சங்கம்)

நிகழ்ச்சிகள்

தேசியக் கொடியேற்றல்: திரு. திருக்குமரன்

மௌன அஞ்சலி

மங்கள விளக்கேற்றல்:

திரு செ. கணேசராசா (கணேசன் களஞ்சியம், திருநெல்வேலி)

திரு இ. காந்தரூபன் (ரூபன் களஞ்சியம், திருநெல்வேலி)

தமிழ்த்தாய் வாழ்த்து: திரு பொன். சுந்தரலிங்கம்

மங்கள இசை; தவில்மேதை அமரர் N. R. சின்னராசாவின் புதல்வர்கள் ரவி சுதா குழுவினர்

தலைமையுரை

வரவேற்புரை: திரு க. தியாகராசா (பொருளாளர் நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்)

பிரதம விருந்தினர்கள் உரை

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

நன்றியுரை: திரு. காசி விஸ்வநாதன் (உப தலைவர், நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்)

கெஞ்சிற் கச்சேரி

★ நாதஸ்வரக் கலாநிதி N. K. பத்மநாதன் நாதஸ்வரம்

★ இசைஞான திலகம் V R ராதாகிருஷ்ணன் வயலின்

★ இசைக் கலா வித்தகர் K கண்ணதாசன் மிருதங்கம்

★ தவில் வித்துவான் P முருகதாஸ் தவில்

★ வித்துவான் சதா வேல்மாறன் தபேலா

★ வித்துவான் P ரதிரூபன் கடம்

பெல்லிஸ

S G [illegible]ந்தன் குழுவினர்

பார்வதி சிவபாதத்துடன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி.

தலைவர்,

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்.

[சி-6965]


# உயிலை எழுதி வைத்துவிட்டே தேர்தலில் குதிக்கும் நிலை

## சுதந்திரக் கட்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு ஜன, 18.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் எமது நாட்டில் நிலவி வந்த ஜனநாயக ரீதியான அரசியல் தற்போது இல்லை. எனவே இறுதி உயிலை எழுதி வைத்துவிட்டே இன்று அரசியலில் இறங்க வேண்டி உள்ளது'

தென் மாகாணசபை தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின்போது சுதந்திரக் கட்சி எம். பியான ரிச்சர்ட் பத்திரன மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் தென் மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகளின் போது அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணிந்து விடப்போவதில்லை அனுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சென்று விட்டாலும் வாக்காளர்கள் அவருடன் சென்றுவிடவில்லை.

இப்படி இவர் மேலும் கூறினார்: (இ)

### மலேரியா மருந்து வந்து சேர்ந்தது

மலேரியா தடுப்பு மருந்துகளில் ஒரு தொகுதி நேற்று 'றுகுணு' கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

மலேரியா நோய் ஏற்பட்டு சுய நினைவு இழந்து வாய் மூலம் மருந்து உட்கொள்ள முடியாத நிலையில் உள்ள நோயாளிகளுக்கு ஊசி மூலம் செலுத்தப்படும் மருந்தே நேற்று இங்கு வந்து சேர்ந்தது. (உ-5)

# கனேடிய தூதுக்குழு கிளிநொச்சி விஜயம்

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதுடன் நாளாந்தம் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளையும் உடன் நிறுத்த வேண்டும்.

கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கிளிநொச்சிப் பகுதிக்கு விஜயம் செய்த கனேடிய நல்லெண்ணத் தூதுக்குழு விடம் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நல்லெண்ணத் தூதுக்குழுவை கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சந்தித்தபோதே இவ்வாறு கேட்டுக் கொள்ளப் பட்டது,

அத்துடன் உள்நாட்டு யுத்தமும் மக்களின் வாழ்க்கை நிலைமையும் என்ற தலைப்பில் மகஜர் ஒன்றும் கனேடிய தூதுக்குழுவிடம் கையளிக்கப் பட்டது. (உ-த)

### அரச அதிபர் கொழும்புக்கு

உத்தியோக பூர்வ விஜயமாக யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று இங்கிருந்து கொழும்பு புறப்பட்டுச் சென்றார். பருத்தித்துறையில் இருந்து ''றுகுணு'' கப்பல் மூலம் காங்கேசன் துறை சென்ற அவர் பின்னர் அங்கிருந்து பலாலி ஊடாக விமான மூலம் கொழும்பு செல்ல ஏற்பாடாகியிருந்தது. (உ-5-9-109-173)

# செலவிடப்படாத நிதி ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்படும்

## ஜனசக்தி திட்ட வைபவத்தில் அரச அதிபர் உரை

வடமராட்சி, ஜன. 18

யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்யப் படாதிருந்தால் அந்நிதி அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் பகுதிகளுக்கு வழங்கப்படும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், ஜனசக்தித் திட்டத்தின் கீழ் நெல்லியடியில் தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி நிலையத்தை திறந்து வைத்து உரைநிகழ்த்திய போது இவ்வாறு கூறினார்.

கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. த. செல்வன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது;

யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி சில பகுதிகளில் இராணுவ நடவடிக்கை காரணமாக செலவு செய்யப் படவில்லை. அவற்றை திட்டங்களைச் சிறப்பாக செயற் படுத்தும் இப்பகுதிக்கு கொடுக்க உத்தேசித்துள்ளேன். செலவு செய்யாத பகுதிக்கான நிதியை திருப்பி ஒப்படைக்குமாறு அரசாங்கம் கேட்டுக் கொண்டது. ஆனால் அந்நிதியை அரசுக்குப் போகவிடாமல் இப்பகுதிக்கு கொடுப்பேன்.

இந்நிதிகளைப் பயன்படுத்தி கம்பியூட்டர் பயிற்சி வகுப்பு போன்ற பொருளாதார முன்னேற்றம் காணும் திட்டங்களை நாம் செயல்படுத்த வேண்டும்.

எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் அரச பிரதான கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது. அக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டு யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், பட்டதாரிகளுக்கு வேலை வழங்கவும், ஏனைய வெற்றிடங்களை நிரப்பவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வேன். அத்துடன் இன்னும் நாறு பேருக்கு தட்டெழுத்தாளர் பதவி வழங்க மாகாணசபையிடம் அனுமதியைப் பெறவுள்ளேன்.

யாழ். மாவட்ட [illegible] அரசியல் பொறுப்பாளர் திரு. செ. இளையவன் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது;

தமிழ் ஈழமேம்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட இப் பயிற்சி நிலையம் சிறந்து விளங்கி சமூகத்துக்கு வழிகாட்டி புதிய சமுதாயத்தின் பிறப்புக்கு வழிகாட்ட வேண்டும். கிராம இளைஞர், யுவதிகள் கல்வியைத் தொடர முடியாத நிலையில் வாழ்க்கையை மேம்படுத்த இது போன்ற பயிற்சி நிலையங்கள் துணைபுரியும்,

கரவெட்டி பிரதேசச் செயலர் திரு. செ. ஸ்ரீனிவாசன் தமது தலைமையுரையில் கூறியதாவது;

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 35 திட்டங்கள் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. ஜனசக்தித் திட்டத்தின் கீழ் முதன் முதலில் அல்வாய் இழக்கு மாயக்கை குளத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். ஆதலால் தொல்பொருள் ஆய்வாளர் தமதுகவனத்தைஇங்கு திருப்ப வேண்டும். (க-173)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்

காரைநகர் மொந்திபுலத்தைப் பிறப்பிடமாகவும், 136/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் (உரிமையாளர், கலைவாணி நகை மாளிகை) 17 - 1 - 94 இல் காலமானார்.

இவர் ரஞ்சினியின் அன்புக் கணவரும், கலைவாணி, பவானி, ஆனந்தவேல், நளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபாலன், ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 18 - 1 - 94 காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. ஆனந்தவேல் (மகன்)
136/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (28981)

### திருமதி பொன்னம்பலம் சுந்தரம்

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி பொன்னம்பலம் சுந்தரம் (தேநீர்க்கடை உரிமையாளர் துறையூர்) 17-01-94 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் சண்முகலிங்கம், ஞானாம்பிகை ஆகியோரின் அன்புத்தாயாரும் மனோன்மணி, கனகசபை, சுப்பிரமணியம் (புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, நாகநாதபிள்ளை சமாதிலிங்கம் மற்றும் எதிர்வீரசிங்கம், குலசேகரம்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரியும், வசந்தகுமாரி, தவஜீவன் (மொஸ்கோ), வனிதா, பவிதா, ஸ்ரீஸ்கந்தராசா சந்திரலீலா, குலேந்திரன் இந்திரகுமாரி, சிவநாதன், மகாலிங்கம் (பிரான்ஸ்) சசிகலாதேவி, யோகராசா (பிரான்ஸ்), கோசலாதேவி, விஜயகுமாரி, ஜெயராசா(பிரான்ஸ்), கமலநாதன் (மாவீரர் ஜீவா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-01-94) எமது இல்லத்தில் நடைபெற்று 11 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவேரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
S. சிவநாதன் (பேரன்)
இல 10 - 2 ஆம் ஒழுங்கை
மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம். (6908)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18-01-1994இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org